உ
சிவமயம்



# அருள் ஞான தீபம்






## கலாவித்தகர் சரவணபவன் பிரணவன்

(திட்ட பொறியியலாளர், வடக்கின் துரித மீட்சித்திட்டம்,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மிருதங்க ஆசான், கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனும்
திரு.திருமதி.சரவணபவன் அவர்களது ஏக புத்திரனுமாகிய

**கலாவித்தகர் சரவணபவன் பிரணவன்** அவர்களின்

# மிருதங்க இசை அரங்கேற்றம்

இடம் : சிவகாமி அம்பாள் திருமண மண்டபம்
சிவகாமி அம்மன் கோயில், இணுவில்

காலம் : 27-04-2013 பி.ப. 2.30 மணி

தலைவர்
**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் M.A. (தமிழ்) M.Ed**
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை.

பிரதம விருந்தினர்
**கௌரவ முருகேசு சந்திரகுமார்**
பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும்

சிறப்பு விருந்தினர்கள்
**எந்திரி.எஸ்.கே.லியனகே**
திட்டப்பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம், மீள் எழுச்சித் திட்டம்
மற்றும் இரண்டாவது சமூக அபிவிருத்தியும் வாழ்வாதார முன்னேற்றத் திட்டம்,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு)

**நாட்டியவேள்**
**கலைஞர் வேல்.ஆனந்தன்**
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், (அழகியற் கல்வி), வடக்கு கிழக்கு
மாகாண கலாசார அமைச்சு, திருகோணமலை)

கௌரவ விருந்தினர்
**சங்கீத பூஷணம் ச.பாலசிங்கம்**
(ஓய்வு நிலை இசை ஆசிரியரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற செயலாளரும்)

## நிகழ்ச்சி விரிப்பு

* மங்கல விளக்கேற்றல்
* இறை வணக்கம்
* வரவேற்புரை : திரு.இ.சர்வேஸ்வரா (உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்)
* தலைமையுரை
* ஆசியுரை : சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள் (பிரதம சிவாச்சாரியார், சிவகாமி அம்மன் கோயில்)
* குரு வணக்கம்
* கலைஞர் கௌரவிப்பு
* நிகழ்வுக்கு மகுடமிடும் இசையரங்கு
* சிறப்பு விருந்தினர் உரை
* கௌரவ விருந்தினர் உரை
* பிரதம விருந்தினர் உரை
* மதிப்பீட்டுரை : இசைச்செல்வர் வை.வேனிலான் (உயிரியல் ஆசிரியர், இசிபதன கல்லூரி, கொழும்பு)
* பாராட்டுரைகள்
* நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இணுவில் திருவூர்

சரவணபவன் அம்பிகை தம்பதியினரின்

சற்புத்திரன் கலைச்செல்வன்

கலா வித்தகர் பிரணவன்

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்ற விழாவில் வழங்கும் கையேடு

# அருள் ஞான தீபம்

27-04-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள் அவர்களின்

## ஆசிச்செய்தி

எல்லாம் வல்ல எம்பெருமாட்டி சிவகாமி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிவுடன் வேண்டிக் கொண்டு, இன்றைய நாளில் தனது மிருதங்க அரங்கேற்றத்தைக் காணும் கலாவித்தகர் சரவணபவன் பிரணவன் அவர்களின் கலையார்வத்துடன் கூடிய ஆற்றலினை மிகவும் பாராட்டுகின்றேன்.

ஆன்மிகம், கலை, கல்வி, ஆற்றல் என்ற மனிதனிற்கே உரித்தான அளவு கடந்த நெறியாற்றல்களினை ஒருங்கே அமைந்த அறிஞர்களையும் கல்வி யாளர்களையும் தன்னகத்தே கொண்ட இந்த இணுவையம்பதியிலே இந்த கலைஞன் மேன்மேலும் தனது கலையினையும் கல்வியினையும் பார் போற்ற வளர்க்க வேண்டும் என்றும் எம்பிராட்டியை வேண்டி நிற்கின்றேன்.

புகழ்பூத்த மிருதங்க வித்துவான் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் தனது ஒன்பதாவது வயதிலிருந்து இந்த தண்ணுமைக் கலையினைப் பயின்று தனது கலையார்வத்தினால் வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்து கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்றதையிட்டு நான் மகிழ்வடைகிறேன். இவரின் கலையார்வத்தினை வளர்க்க இவருடன் துணை புரிந்த இவரின் தந்தை, தாயாருக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரணவன் அவர்கள் மேலும் பற்பல கலைகளையும் சிறப்புறக் கற்று அத்தோடு மட்டுமல்லாது தனது கல்வியினையும் தொடர்ந்து இந்த இணுவையம் பதியிலே சிறந்த ஒரு வித்துவானாகவும் கல்விமானாகவும் விளங்க வாழ்த்துகிறேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ சோமசபேசக் குருக்கள்,
பிரதம சிவாச்சாரியார்,
இணுவில் சிவகாமி அம்மன் கோவில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி

கலாபூஷணம் க.ப. சின்னராசா அவர்கள் இவ்விலங்கை மண்ணில் பல மிருதங்கக் கலைஞர்களைக் கற்பித்து அவர்களின் அரங்கேற்றங் கண்டவர். அவருடைய சிட்சையே தனித்துவமானது. அவரிடம் மிருதங்கம் பயின்ற கலாவித்தகர் சரவணபவன் பிரணவனின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

உத்தியோகத்துறைகளில் பல பட்டங்கள் பெற்று வேம்போலை, இணுவிலில் வசிக்கும் சரவணபவன் பிரணவன் இயல்பாகவே நற்குணங்கள் பொருந்தியவர். திட்டப் பொறியியலாளராக வேலை செய்தும் கூட சங்கீதத்தின் மேல் அக்கறை கொண்டு அவர்கள் மிருதங்கம் பயின்றார்கள். சங்கீதக் கச்சேரிகளில் தனித்துவம் வகிக்கும் மிருதங்க வாத்தியம் வாசிப்பது அவரின் சிறப்பம்சமாகும். இவர் வட இலங்கை சங்கீத சபையில் "கலாவித்தகர்" பட்டம் பெற்றவர். இவருடைய மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்திக்கிறேன்.

சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்
தர்ம சாஸ்தா குருகுலபீடம், இணுவில்.



# செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

கலை மலிந்த திருவூர் இணுவில் இசைஞானம் நிறைந்த வித்துவச்சபை போற்றிய மண்ணில் உதித்த, இளம் கலைஞர் சரவணபவன் பிரணவன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். நந்தியெம்பெருமானின் நற்கலையாகிய மிருதங்கக் கலையை புகழ்பூத்த மூத்த வித்துவான், கலாபூஷணம் உயர்திரு. க.ப.சின்னராசா அவர்களிடம் நெறிமுறை தவறாது கற்று அரங்கேற்றுவது பெருமைக் குரிய விடயம். தனது கல்வியையும் சிறப்பாக மேற்கொண்டு, கலை ஆர்வத்தையும் காத்து வரும் பிரணவனின் திறமை மெச்சத்தக்கது. இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையின் சாதனை மறக்க முடியாது. ஆண்டு தோறும் சிறந்த கலைஞர்களை எம்மண்ணுக்கு ஆற்றுப்படுத்தும் சபையின் பணி போற்றுதலுக்குரியது. தன்னிடம் கற்க வரும் மாணவரை உள்ளத்தால் வாழ்த்தி, அவர்களின் சிறப்புக்களை நித்தமும் வாழ்த்துகின்ற உன்னத பண்பு கொண்ட குருவிடம் கற்கும் பாக்கியம் பெற்ற இக் கலைஞன் புகழ் பூத்த வித்துவானாக மிளிர்வான் என்பதில் ஐயமில்லை. அரங்கேறும் நாயகனின் தந்தையார் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அக்குடும்பத்தவரின் ஆன்மிக கல்வி ஆற்றலைக் கண்டு வியந்தவன் யான். எனவே கல்வியும், கடவுள் பக்தியும், கலை அறிவும் மிக்க குடும்பத்தின் மைந்தன் சிறந்த விற்பன்னராக விளங்கி எம் மண்ணுக்கு பெருமை தரப் பிரார்த்தித்து வாழ்த்தி நல்லாசி கூறி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"

கலாநிதி. ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருவின் ஆசிச்செய்தி


இசையினுள் நிருத்த, கீத, வாத்தியங்கள் அடங்குகின்றன. இம் மூன்றினையும் ரசிக்கவும், ருசிக்கவும், பயில்வதற்கும் இறையருள் முக்கிய மானதாகும். இசைக்கல்வியானது எல்லோருக்கும் வயப்படாதெனலாம். மாதா, பிதா, இறையருள், குருவருள் அனுசரணை இன்றேல் இசையானது ஏற்றம் பெற மாட்டாது.

லயக் கருவிகளுள், முதன்மையானதும், முக்கியமானதுமாகிய மிருதங்கத்தைப் பயில்வதும், பக்க வாத்தியமாகப் பரிணமிக்கச் செய்வதும் இலகுவான செயல் அல்ல. பாடல்களுக்கும், நடனங்களுக்கும், வாத்திய இசைகளுக்கும் உறுதுணையாக உதவுவதோடும், லயப்படுத்தி மெருகூட்டுவதும் மிருதங்கமாகும்.

தம்பி பிரணவன் அவர்கள் சிறுவயதிலிருந்தே இளந்தொண்டர் சபை மிருதங்க வகுப்பில் என்னிடம் வரன்முறையாகப் பயின்று, ஆசிரிய தரத்தில் முதன்மைச் சித்தி பெற்றதோடு, வட இலங்கை சங்கீத சபையினரின் "கலாவித்தகர்" பட்டத்தையும் பெற்றுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதும், பெருமைப் பட வேண்டியதுமாகும். இவரது அருமைப் பெற்றோர் திரு. திருமதி சரவணபவன் அவர்களின் அயரா அனுசரணையுடன் தம்பி பிரணவனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று (27-04-2013) இறைவன் திருவருளோடு நடைபெறவுள்ளமை, இவரது முயற்சியின் திருவினைப் பயனாகும். தாம் கற்ற வித்தையினை கலைஞர், கற்றோர் முன் சமர்ப்பணம் செய்து அவர்தம் ஆசிகளையும், பாராட்டுக்களையும் பெறுவதோடு மேலும் இக் கலையில் பூரணத்துவமும், சிறப்புகளும் பெற்று மேலோங்க வேண்டி இறைத்தாயை இறைஞ்சுகின்றேன்.

இறைவனது திருவருளோடு, எனது குருநாதரின் குருவருளையும் வேண்டி எனது ஆசிகளையும், மனமுவந்த பாராட்டுகளையும் வழங்கி மகிழ்கின்றேன்.

நன்றி.



கலாபூஷணம் க.ப.சின்னராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்செல்வன் சரவணபவன் பிரணவன்

# அவர்களின் மிருதங்க அரகேற்றம்



## தொகுப்புரை

### அருள் ஞான தீபம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

"ஏரார் இணுவில் வாழ் எந்தை கணபதியின்
தாரார் திருவடியைத் தாள் பணிந்தோர் - ஆரா
அமுதம் போல் வாழ்வர் அருட்செல்வம் சூழ்வர்
தமிழுள்ளவும் தழைத்து"

அருள் பூத்த ஆலயங்களில் இறையருள் பொலிய, பசுமையுடன் வாழும் பைந்தமிழின் இணை பிரியாத கலையென்னும் அருள்ஞானதீபம் பிரகாசிக்க, கலையார்வம் மிக்க சீலர்களின் மனங்கவர்ந்த ஏழிசை வாழ்ந்திடும் இணையிலி என்னும் திருவூராம் இணுவையம்பதியில் பிறந்து வாழும் நாமனைவரும் நிறை வுடன் வாழ்வாங்கு வாழ வைத்தவள் எங்கள் உலக மாதாவான மகாசக்தியே.

எமதூரில் மேழிச் செல்வத்தை நாடிய அனைவரும் சக்தியின் அருள் பெற்றவர்கள். கவலைகள் நிறைந்த எம்மை வாழ வைக்கும் சக்தியவள் தினம் தினம் எம் கவலையை நீக்கி எம்மை மன நிறைவுடன் நிம்மதியாக வாழ வைக்கிறாள். மேழிச் செல்வம் பெருக எந்தை கணபதியின் அருள் ஞானச் செல்வமும் மலர்கிறது. வளமுடன் வாழும் வஞ்சமில்லாதார் நெஞ்சில் திருவும் கல்வியும் கலைகளும் அலை பாய்வதுபோல் அன்னை சக்தியின் அவதாரமாம் கலைமகளும் அலைமகளும் வந்து உறைகின்றனர்.

அன்னையவள் குடியிருக்கும் வீடு இணுவிலுறை சிவகாமசுந்தரியின் இணைப் பெயர்களான அம்பிகை, அபிராமி, சிவகாமி வாழும் இல்லமாகும். இவ்வினிய இல்லத்தின் குடும்பத் தலைவனோ சரவணபவன். இவர்களின் ஏக புத்திரன் பிரணவனே இன்றைய விழாவின் கதாநாயகன். இத்தெய்வீகக் குடும்பத் தின் அணையாத "அருள் ஞான தீபம்" கலை ஞானச் சுடராகப் பிரகாசிக்கிறது. இன்றைய தெய்வீக பாரம்பரிய கருவி வாத்தியமான தண்ணுமை என்னும் மிருதங்க இசை அரங்கேற்றம் இச் சக்தி குடும்பத்தின் சுற்றுச்சூழ் உறவுக் குடும்பங் களின், இணுவில் கிழக்கில் முதன் முதல் நிகழும் பிரவணவனின் நிகழ்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தியெம்பெருமானின் தெய்வீகப் பணியான மிருதங்கத்தின் இசை யார்வம் மிக்க கலைச்செல்வன் கலைத்தாயின் பேரருளால் அன்னை மகாசக்தி யின் கடைக்கண் வீச்சினால் எந்தை கணபதியாம் ஞானக்கொழுந்தின் ஆசியுடன் ஓதுவித்த குருவின் பாதம் பணிந்து இப் பெருஞ்சபையில் இன்று பிரணவன் தண்ணுமை இசையைக் காணிக்கையாக்குகிறான்.

இவ்வரிய குடும்பத்தின் முத்தான மூத்த சோதரி அபிராமி ஆடல் வல்லானின் பாதம் பணிந்து பரதக் கலையைப் பண்ணுடன் கற்றவள். தன் உயர் கல்வியும் எம் மண்ணின் அன்றைய அமைதியின்மையும், வசதியீனமும் அணி செய்ய அரங்கேற்றம் காணாது ஆயுர்வேத வைத்திய கலாநிதியாக உயர இறை யருள் பாலித்தது. இச்சிறப்புடன் இல்லறம் நாடி இலண்டனில் இனிய வாழ்வு வாழும் நியதி கிட்டியது. கலைத்தாயின் செல்வமான மழலையுடன் மகிழும் வேளை சோதரனின் மிருதங்க இசையரங்கேற்றத்தைத் தூண்டினாள்.

அடுத்த சோதரியான சிவகாமி கலைத்தாயை நேசிக்குமுன் கல்வித் தாயால் ஈர்க்கப்பெற்று முன்னேற்றங் கண்டதும் இல்லற தர்மம் நாடினாள். வாழ்வுத் தகைமையுடன் பிரான்ஸ் நாடு சென்று இரு மதலைகளுடன் இனிது வாழ்ந்தபோதும் எம்மினுவை மண்ணின் கலை கலாசாரம் மற்றும் ஆன்மிக நெறியில் மூழ்கி ஊரோடும் உறவோடும் இணைந்து கலைப் பணியில் வாழ்கிறாள். மூத்த சகோதரிகளின் உந்துதலும் ஊக்குவிப்புமே இன்றைய மிருதங்க இசைக்கு உதவு முனையாக அமைந்தன.

ஏகப்புதல்வனாம் பிரணவன் எந்தை கணபதியின் அருட்சக்தி பெற்ற பேறாக நற்கல்வியில் பிரகாசித்தபோதும் நந்தியெம்பெருமானின் தண்ணுமை இசை மீட்டலை உய்த்துணர்ந்து தமது ஒன்பதாம் வயதில் மிருதங்க இசையைக் கற்க இறையருள் உந்தியது. அக்காலம் யுத்த நெருக்கடியும் வாழ்வாதார நலிவும் மிகுந்தபோதும் பெற்றோரின் பேராதரவுடன் இணுவில் இளந்தொண்டர் சபையால் நடாத்தப்பெற்ற மிருதங்க இசையைக் கற்க இணைந்தார். குருவாக அமைந்து செல்வன் பிரணவனை அடி எடுத்துக் கொடுத்த கலாபூஷணம் பிரபல மிருதங்க மேதை க.ப.சின்னராசா அவர்கள் தமது வித்தையை நல்கினார். குருவின் வித்தகத் திறமை விசேட கலைத்தாகமுடைய பிரணவனின் அணிகலனாக அமைந்தது.

ஆண்டுகள் சென்றன. பிரணவன் உயர் கல்விக்காக கலைத்துறையில் ஆர்வம் காட்ட முடியவில்லை. குருவின் வழிகாட்டலில் வட இலங்கைச் சங்கீத சபையால் நடாத்தப்பெற்ற மிருதங்க இசைப் பரீட்சைகளிற் தேறி வந்தார். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பேறாக 2012இல் மிருதங்க இசையின் உயர்தரமான ஆசிரியர் மட்டத் தேர்விலும் தேறியதால் "கலா வித்தகர்" என்னும் பட்டத்தையும் தனதாக்கினார்.

உயர் கல்வியில் மொறட்டுவப் பல்கலைக் கழகத்தில் பொறியியற் பட்டம் பெற்றார். பெற்ற பட்டம் பொறியியலாளராகும் வாய்ப்பையும் தந்தது. பட்டம் பதவி ஏற்றபோதும் தாம் உள்ளத்திற் பதித்த மிருதங்க இசையை மறக்காமல் இணைந் திருந்தார். பிறந்த மண் வாசனையும் தமது தெய்வீகக் குடிப்பிறப்பும் பெற்றவளைப் பெருமைப்படுத்தும் விருப்பும், மறைந்த தந்தையின் ஆத்மா ஈடேற்றமடைய வேண்டிய அர்ப்பணமும், சோதரிகளின் உற்சாகமான உந்துதலும் எதிர்கொள்ள இன்றைய அரங்கேற்றம் உதயமானது.

இந்த நிகழ்வின் சிறப்பை நோக்குவோம். இணுவில் திருவூரின் கிழக்குப் பகுதியில் பலர் மிருதங்க இசை பயின்றனர். சிலர் வேலை வாய்ப்புடன் வெளிநாடு சென்று தாம் கற்ற இசை பரப்பி வருகின்றனர். எவரும் இதுவரை மிருதங்க அரங்கேற்றஞ் செய்யவில்லை. எங்கள் குல தெய்வமாம் உலக மகாசக்தியின் கடைக்கண் பார்வையிலமைந்த சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் எங்கள் கலாவித்தகர் பிரணவனின் மிருதங்க இசை அரங்கேற்றம் முதன் முதல் நடை பெறும் பெருமைக்குரியது. இன்றைய நிகழ்வில் தமது மூதறிவின் திறமையை ஒரு முது மாணவன் மூலம் சிறப்பிக்கும் கலாபூஷணம் க.ப.சின்னராசாவும் இசைத் துறையில் இன்று சிறந்து விளங்கும் பாடகர் உட்பட ஏனைய இணைந்த கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

உற்றார் உறவினர், பெற்ற அன்னை, சோதரிகள், கற்றோர், கலைஞர்கள், நண்பர்கள் யாவரும் உள்ளன்புடன் ஆசி கூறி வாழ்த்துரைக்க கலாவித்தகர் பிரணவன் தமது பயின்ற மிருதங்க இசையை மீட்டுக் கலைத் தாயுடன் குல தெய்வமாம் அன்னை இணுவைச் சிவகாமி அம்பாளின் பொற்கமலத்தில் இன்று (27-04-2013) அர்ப்பணித்த இனிய சுப தினமாகும்.

எமது சீர்இணுவைத் திருவூரில் பாரம்பரியக் கலையாம் மிருதங்க இசையைப் போற்றும் பிரணவனை இணுவை மண் மாதாவும் வாழ்த்திப் பெருமை யடைகிறாள்.



கலாபூஷணம்
மூ.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இசைச்சுவை பெருகிட வாழ்த்துக்கள்

அன்புக்குரிய சரவணபவன் பிரணவனுடைய மிருதங்க அரங்கேற்ற அளிக்கை செவ்விய இசைச் சுவைகளோடு இனிதே அமைந்து சிறப்புற எமது உற்சாகமான நல் வாழ்த்துக்கள்.

"மத்தளம் கொட்டல்", "தண்ணுமை முழங்கல்", "மங்களத் தோற்கருவி மாசின்றி ஒலித்தல்", "பண்ணோடிணைந்த பசுங் கருவி மீட்டல்", "நந்தியெங் கருவியின் நாதம் எழும்பல்", "வானோர் தெரிந்தெடுத்த வண்டமிழ்க் கருவி தேனாய் ஒலித்தல்" என்றவாறு இலக்கியப் பதிவுகளுக்கு உள்ளாகிய மிருதங்க நல் வாத்தியத்தைப் பேராசான் மிருதங்க கலாநிதி சின்னராசா ஆசிரியரிடம் வரன்முறையாகப் பயின்று அரங்கேறும் பிரணவனின் கலைப் பயணம் சிறப்புற்றுச் சீர்மை பெறுவதாக.

இணுவைத் திருவூரிலே கவின்கலை வளர்த்து மெருகு பெறச் செய்யும் இளந் தொண்டர் சபையின் செயற்பாடுகளும் இணுவை மக்களின் கல்வியார்வமும் இச் சந்தர்ப்பத்திலே பாராட்டுக்குரியவை.

பொறியியலாளர் சரவணபவன் பிரணவனுடைய கலையார்வத்தை வளர்த்தெடுக்கும் பெற்றோரும், நண்பர்களும் உறவினர்களும் இணுவையெம்பதியின் கலைக்கவி நிலையம் என்றும் வாழ்த்துக்குரியவை.

பேராசியர் சபா. ஜெயராசா
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

## அரங்கேற்றம்
## சிறக்க வாழ்த்துகிறேன்.



கேட்குந்தோறும், கேட்குந்தோறும் இனிமை தரும் ஓசை நயம் கொண்ட உன்னதமான வாத்தியம் மிருதங்கம் ஆகும். தேவர்களையும், மனிதர்களையும் உலகத்து ஏனைய ஜீவராசி களையும் மகிழ்ச்சிப்படுத்துவதற்காக இறைவனால் உருவாக்கப் பட்ட உன்னதமான வாத்தியம் மிருதங்க வாத்தியமாகும். இந்தப் பெருமை மிகு வாத்தியத்தினை எனது அன்புச் சகோதரன் திரு.க.ப.சின்னராசா அவர்களிடம் முறைப்படி பயின்று இன்று அரங்கேற்றம் காணும் கலாவித்தகர் சரவணபவன் பிரணவன் அவர் களை வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். கலைப் பண்புகளுடன், புதிய பல கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்ற கலைத்துவ வேட்கையும் கொண்ட திரு.க.ப.சின்னராசா அவர்களை தனது குருவாகக் கொண்டமைந்தது பிரணவன் செய்த பெரும் பேறு என்றே சொல்வேன். அத்துடன் பிரணவன் கலைக் குடும்பத்தைச் சேர்ந் தவர் என்று அறிகிறேன். அவரது சகோதரி நடனக் கலைஞராக இருக்கிறார். அவர் ஒரு பொறியியலாளராக இருந்து கொண்டும், மிருதங்கக் கலையில் நிறைந்த பயிற்சியைப் பெற்று இன்று அவையோர் முன் தன் கலையை ஆற்றுகைப்படுத்துகிறார்.

இந்த அரங்கேற்றம் சிறப்பாக அமைய வேண்டியும், அவருக்கும், அவரது குருவுக்கும், அரங்கேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் ஏனைய கலைஞர்களுக்கும் ஆசி வேண்டியும் இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

சங்கீதபூஷணம்      வாழ்க!
திரு.ச.பாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகிழ்த்தெழும் கலைஞனை வாழ்த்துவோம்

ச.லலீசன்
நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தமிழ்த்துறை விரிவுரையாளர். இலங்கை கல்வியாளர் சேவையைச் (SLTES - Class III) சேர்ந்தவர். 2010 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கோயம்புத்தூரில் இடம்பெற்ற உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கலந்து கட்டுரை படித்த யாழ்ப்பாணத்தவர் சிலருள் ஒருவர். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதி வருகின்றார். யாழ்ப்பாணக் கம்பன் கழகம் மற்றும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் என்பவற்றில் பிரதான பாத்திரங்களேற்று இலக்கியப் பணிகளாற்றி வருகின்றார்.

பண்டைத் தமிழரின் சொத்தாகத் திகழும் வாத்தியங்களுள் மிருதங்கம் முதன்மையானது. மிருதங்கம் என்பது வடமொழிச் சொல். இது மதங்கம் என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து பிறந்ததாகக் கருதுகின்றனர். சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் "முழவு", "தண்ணுமை" என்பன இன்றைய மிருதங்கத்திற்கான அடிப்படைக் கருவிகளாக இருக்கலாம். சிலப்பதிகார காலத்தில் தாளக்கருவிகளுள் தண்ணுமை முதன்மை வாய்ந்ததாகத் திகழ்ந்திருக்கிறது.

தமிழ்க் கலைகளை வளர்த்தெடுக்கும் மரபில் எங்கள் யாழ். மண்ணிற்குப் பிரதான இடம் உண்டு. கலை என்பது வாழ்வூதியத்திற்கான தொழில் என்ற மனோநிலையில் வாழும் கலைஞர்களை யாழ். மண்ணில் காண்பது அரிது. "கலை கலைக்காகவே" என்ற மனோதிடமே எங்கள் கலைஞர்களிடம் காணப்படுகின்றது.

எம்மண்ணின் இசைக் கலை வரலாற்றில் கலாபூஷணம் க.ப. சின்னராசா அவர்களுக்குத் தனித்துவமான இடம் உண்டு. நன்மாணாக்கர் பலரை இசைத் துறைக்குப் பிரசவித்த பெருமைக்குரியவர். கூடவே எங்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மிருதங்கக் கலைக்கான விரிவுரையாளராகப் பணியாற்றி நல்லாசிரியர்களை உற்பவித்தவர்.

கலாபூஷணம் க.ப. சின்னராசா அவர்களின் ஆற்றுப்படுத்தலில் இளங் கலைஞர் சரவணபவன் பிரணவன் இன்று அரங்கிற்கு வருகின்றார். நம்மண்ணின் இசைத்துறை முகவரியாக இன்று கொள்ளத்தக்க கலைஞர் தவநாதன் றொபேட் அவர்களின் குரலிசை பிரணவனின் விரலிசையுடன் சங்கமிப்பதைக் காண மனம் அவாவுகின்றது.

பிரணவன் இசைத்துறையில் கொண்டிருக்கும் வேட்கையைக் கண்டு தலைசாய்க்கின்றேன். பொறியியலாளராக அறிவியற்றுறை சார்ந்து பணி செய்தாலும் மனநிறைவை ஏற்படுத்துவதில் முன்னிற்கும் இசைக்கலையின் பெருமையை அவர் உணர்ந்திருக்கிறார். அதன் பயனாய் அரங்கேற்றம் காண்கிறார்.

யாழ். மண்ணில் புதிதாய் முகிழ்த்தெழும் அரங்கக் கலைஞரை வாழ்த்துவோம்.

"கலையின்பமே நிலையின்பமாம்"

செந்தமிழ்ச் சொல்லருவி
ச.லலீசன் M.A. (தமிழ்) M.Ed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கை சங்கீதசபைத் தலைவர் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

தமிழர் தம் இசைப் பாரம்பரியத்தில் முகிழ்ந்தெடுத்த தோற்கருவிகளுள் மிருதங்கம் தனித்துவமானதும், தண்ணென்ற ஒலி எழுப்பும் சால்புடையதும் ஆகும். இவ்விதமான சிறப்புப் பெற்ற லய வாத்தியக்கலை, யாழ்ப்பாணக் கலைப் பாரம்பரிய வளர்ச்சியின் பயில்நிலையிலுள்ள கலை வடிவங்களில் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நாட்டின் மிருதங்கக் கலையை வரன்முறையாகக் கற்பித்துவரும் நல்லாசரியர்களுள் கலாபூஷணம் சின்னராசா அவர்கள் தனித்துவமானவர். அறிமுறை நிலையிலும், ஆற்றுகை நிலையிலும் அவரது ஆற்றல்கள் சிறப்பாக வெளிப்பட்டு நிற்கின்றன. அவரிடம் மிருதங்கக் கலையைப் பயின்று, அரங்கப் பிரவேசம் செய்யும் செல்வன் சரவணபவன் பிரணவன் வட இலங்கைச் சங்கீத சபை ஆறாந்தரத் தேர்விலே சித்தியடைந்து "கலா வித்தகர்" பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

திட்டமிடற் பொறியியலாளராக கடமை புரியும் இவர் மிருதங்கக் கலை யில் ஈடுபாடு காட்டுவது கலைமேல் அவருக்கு இருக்கும் ஆர்வ மேலீட்டினைப் புடம்போட்டுக் காட்டுகிறது. இவரது கலை ஆர்வம் மேன்மேலும் வளர்ந்து கலையுலகில் ஆழக் காலூன்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வட இலங்கைச் சங்கீத சபை சார்பில் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உ.தயகுமார்,
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை.

# இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினரின் ஆசிச் செய்தி

ஆத்மிகம், கலை, கலாசாரம், பொருளாதாரம் ஆகியவற்றின் மேம்பாட்டினைக் கருப்பொருளாகக் கொண்டு செயற்படும் எமது சபையின் கலை, கலாசாரப் பிரிவின் மிருதங்க வகுப்பில், ஆசான் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் அரவணைப்பில், தனது ஒன்பதாம் வயதில் கால் பதித்த சரவணபவன் பிரணவன் அவர்கள், பணிவுறக் கற்ற மிருதங்கக் கலையை வட இலங்கைச் சங்கீத சபையில் 2012ஆம் ஆண்டு கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்று கலைத் தன்மையை மேம்படுத்தி சபைக்கு பெருமை தேடித் தந்தார். அத்தோடு நில்லாது பாரம்பரியத்தினை அரவணைத்து 27-04-2013 அன்று மிருதங்க அரங்கேற்றத் தினை நிறைவு செய்து கலை உலகில் பிரவேசிக்கின்றார். இதுவும் எமது சபைக்குரிய சிறந்த அறுவடையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத் துறையில் ஈடுபட்டால் கல்வித்துறையில் பாதிப்பு ஏற்படுமோ? என்னும் வினாவிற்கு துல்லியமான பதிலாய் அமைவது இவரது அரங்கேற்றம். தனது 27ஆவது வயதில் அரங்கேற்றம் காணும் எமது கலை வகுப்பு மாணவன், மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பைத் தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் "வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில்" திட்ட பொறியியலாளராக தனது சேவையைத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஓர் பொறியியலாளர்.

இந்த நிகழ்வுக்கெல்லாம் காரணமாக அமைவது அன்னை சிவகாமியின் அருட் பார்வையே. அன்னையின் ஆலயச் சூழலில் வாழ்ந்து அன்னையைக் குல தெய்வமாகப் பூசிக்கும் பண்புமிகு குடும்பத்தின் மகவு இவர். அன்னையவள் மகிஷாசூரனைச் சங்காரம் செய்ய அருள் வடிவு கொண்டு அறுபத்து நான்கு கலைகளையும் தன்னகத்தே கொண்டு அருள் உலா வந்து இணுவைக்கந்தன் ஆலயத்தில் வன்னி வாழை வெட்டி விஜயதசமி நன்னாளைச் சிறப்பிக்கும் அருள் மழையில் குளிக்கும் எமது இளந்தொண்டர் சபையினிலே அறுபத்துமூன்று கலைகளுக்கும் உறைவிடமாகத் திகழும் பாதரட்சையின் முன்பாக ஆசான் க.ப.சின்னராசா ஆசிரியரவர்களிடம் விஜயதசமி நன்னாளில் தனது ஒன்பதாவது வயதில் வித்தியாரம்பத்தினைப் பெற்ற இவர், இன்றைய தினம் அன்னை சிவகாமியின் அரவணைப்பில் அமைந்த சிவகாமி அம்பாள் கல்யாண மண்டபத் தில் அரங்கேற்றம் செய்ய அருள் வாய்ப்புக் கிட்டியமை எமது சபையும் இம் மாணவனும் பெற்ற அருட்பேறேயாகும்.

எமது மாணவன் தனது இரு கண்களெனப் போற்றி வளர்த்த பொருளாதாரக் கல்வியான பொறியியற் கலையும் எமது சபையில் கற்றுக்கொண்ட கலைக் கல்வியான மிருதங்கக் கலையும் அன்னை சிவகாமி அம்பாளின் ஆன்மிகவீரக் கலையும் சேர்ந்து கல்வி, செல்வம், வீரம் ஆகிய இம்மூன்றும் பெற்றுத் திகழும் செயல்வீரனாக மிளிர எல்லாம் வல்ல இணுவை மூவாம்பிகையாம் சிவகாமி அம்பாளையும் இணுவைக் கந்தவேள் பெருமானை யும் மனதாரத் தியானிப்போமாக. பரம்பொருளாசி என்றென்றும் பெற்றுத் திகழ நல்லாசி கூறித் தியானிப்போமாக.

வாழ்க! சரவணபவன் பிரணவன்
வளர்க! தருமெனும் அவன் பணி

ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரன்
இணுவில் கந்தசுவாமி கோவில்
இளந்தொண்டர் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களகரமான விஜய வருடம் சித்திரைத் திங்கள் 14ஆம் நாள் 27-04-2013ல்

**"கலாவித்தகர்" சரவணபவன் பிரணவன் அவர்களது**

மிருதங்க அரங்கேற்றத்தின் போது வாழ்த்தி வழங்கும்

# பாராட்டு மடல்

கலைமாதுந் தமிழ்மாதுங் களித்துறையு மினுவையினில்
கலை வளமுந் தமிழ்வளமும் மிளிர்ந்துவரு பேறிதனால்
நிலையான பண்பாடும் நேர்மைமிகு நற்புகழும்
மலைபோலும் நல்லறமும் நிறைந்ததெங்கள் தவப்பயனே


நற்கலைகள் பலநிறைந்த நல்லினுவைத் திருநகரில்
பொற்புடைய புண்ணியங்கள் பொருந்திய பேறதனால்
பற்பலரும் போற்றுபுகழ் சரவணபவனார் செய்தவத்தின்
அற்புதமே வடிவெடுத்த அரும்புதல்வன் பிரணவனே



கற்றற் குரியதெலாம் கற்றுணர்ந்து பொறியியலில்
அற்புதமாம் துறை பயின்று அவனியினில் மிளிர்போதில்
மற்றுமொரு கலையாக மிருதங்கக் கலைபயின்று
பற்பலரும் போற்ற அரங்கேற்றங் கண்டனனே

மிருதங்கத் துறைதனின் மிகநுட்ப நெறிதேர்ந்து
வருசிறப்பின் பயனாக வண்ணமாம் "கலாவித்தக"ரெனும்
பெருஞ்சிறப்பும் பெற்றுயரும் கலைஞனை மனமார
அருங்கீர்த்தி பெறுகவென அன்பாக வாழ்த்துவமே.

வாழிய வாழிய கலையெலாம் கற்றுயர்க.
வாழிய வாழிய இணுவைநகர் சிறக்க.
வாழிய வாழிய பற்பலரும் போற்ற
வாழிய வாழிய மங்கலமாய் வாழியவே



வாழ்த்துபவர்,
பண்டிதை திருமதி. தனலட்சுமி மகாலிங்கம்
"செந்தமிழ்ச் சோலை"
அங்களப்பாய், இணுவில் கிழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Felicitation message from the Eng. S.K.Liyanage,Project Director, Re-awakening Project, Emergency Northern Recovery Project& Community Development & Livelihood Improvement Project

It gives me great pleasure in sending a felicitation message to Kalaviththagar Saravanapavan Piranavan on the occasion of his "Miruthanga Arangetram".

Music is an universal language which has been acclaimed by all human beings and has no barrier to appreciate. This could be done without the knowledge of language. National unity, integrity and harmonious way of living could be established through music.

Miruthangam is a leather instrument. Original sound comes from the vibration of this instrument. From time immemorial, Miruthangam is one of the leather instrument plays most important role in the Carnatic musical world. Mr.Piranavan has an aptitude for this specialty from his age of 09 under Guru Sangeetharatnam K.P. Sinnarajah, such a lengthy experience in learning, definitely will take him to the top of the ladder of Carnatic music world. I have observed that he has keen interest in learning this instrument to use without any difficulty. I understand that he has this caliber since his birth. Furthermore he has qualified Teachers Grade Examination of the North Ceylon Oriental Music Society.

All functions of the world take place in a rhythmic way. Greatest of the fine arts is music. It gives great pleasure to hear. Global thinking starts with music. It has the power to bring all the living together. It creates world consciousness. By learning music one gets, good look, attractive appearance and a bright face. Music is a perfect art.

God has created fingers to us to play instruments. Miruthangam comes under the broad classification of leather instruments and it is called "avanatha" and known as membranophones.

Miruthangam has also helped ingreat extent for the development of musicology. The importance could be felt by having Damaruka in the hands of Lord Siva, flute in the hands of Lord Krishna, veena in the hands of Goddess of Arts Saraswathi or sarasavi and Nanthithevar with Miruthangam.

I wish him all success.

**Eng. S.K.Liyanage**

**Project Director.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வளர்க்கும் திட்ட பொறியியலாளன்

முத்தமிழ் மூன்றிலும் முதன்மை பெறும் மிருதங்க இசை அரங்கேற்றத்தை சிறப்புற நடத்தும் செல்வன் கலாவித்தகர் சரவணபவன் பிரணவன் அவர்களின் அரங்கேற்றத்துக்கு வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளதை பெரும் மகிழ்ச்சியாக கருதுகிறேன்.

இவர் ஒன்பது வயதிலிருந்து மிருதங்கக் கலையைப் பயின்று பல கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்துள்ளதை யாம் அறிவோம். அத்துடன் மிருதங்க பேராசான் கலாபூஷணம் சின்னராசாவை குருவாக கொண்டது இவருக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாகும்.

இவரது இவ் இள வயதினிலே வட இலங்கை சங்கீத சபையினால் 2012ம் ஆண்டு ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்து தொடர்ச்சியாக அவைக்காற்றுகையின் போது "கலாவித்தகர்" என்ற விருதும் வழங்கப்பட்டது இவரது இளமையில் இசையில் உள்ள ஆர்வத்தையும் முதிர்ச்சியையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் திட்டப் பொறியியலாளராக கடமையாற்றும் இவர் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து இக்கடினமான பணியையும் செம்மையாக நிறைவேற்றி வருகின்றார். இவரது ஆளுமையின் மற்றொரு வெளிப்பாடாகும்.

"தோன்றிற் புகழொடு தோன்ற வேண்டும்" என வள்ளுவன் ஆசைப்பட்டது போல் இதுவரை சாதித்தது போல் மேலும் மேலும் பல சாதித்து மண்ணின் மகத்துவத்தையும் தாய் நாட்டின் பெருமையையும் மாண்புடன் மானிடர் போற்ற மகத்தான வெற்றிகளையும் பெற்றுய்ய வேண்டுமென மனதார ஆசீர்வதிக்கிறேன்.

எந்திரி. றொபேட் வி.பீரிஸ்
மேலதிக திட்டப் பணிப்பாளர்,
வடக்கின் துரித மீட்சித் திட்டம்,
மீள் எழுச்சித் திட்டம்,
வடமாகாணம்,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You...

Education in Science and Technology...
A talent with Traditional music of "Miruthangam"...
Knowledge with continuous education and training...
Efficiency and effectiveness at work place...
Ability and luck favour you...
Moving towards your goals steadily...
wishing success and best in your life...!
Above all for "Piranavan"



Eng.E.Sumanadasa
Senior Engineer,
Emergency Northern Recovery Project.
Ministry of Economic Development.

It is a success, you truly deserved. It is an achievement you have truly earned. I congratulate you on your success and wish you all the best for you future. Well done.

Deepthi Champika Hettiarachchi,
Procurement Specialist
Emergency Northern Recovery Project &
Re awakening Project.

**Miruthanga Arangatram**
**Selvan Piranavan.**
**27.04.2013**

I take great comfort and delight in going this message to invoke blessings and pray the All - MIGTY to Usher all happiness On - master S.Piranavan. Son of late Mr. Saravanapavan and Mrs.Saravanapavan, who will be displaying his takents in Miruthangam this evening.

Completed his teacher's grade in the N.C.O.M.S. Exam. We wish him all the very best and bless him for a bright future.

Mr. & Mrs. Sivasakthivel,
Uncle and aunty.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கேற்றம் சிறக்கட்டும்!...

ஓசையாகவும், ஒலியாகவும், உணர்வாகவும், உற்றவர்க்குச் சுற்றமாகவும், கற்ற கலைஞனாகவும், கற்றவர்க்குக் கற்பகமாகவும் இறைவன் எம்முள் நிறைவாக நிற்கிறான். இறைவனைப் போற்றித் துதிப்பதற்கு இசைக்கலைக்கு உறைவிடமாக விளங்கும் இணுவில் திரு.திருமதி.சரவணபவன் அம்பிகை பெற்ற கனிஸ்ட புத்திரன் செல்வன். பிரணவன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் 27-04-2013 அன்று சிவகாமி அம்பாள் கல்யாண மண்டபத்தில் இடம்பெற இருக்கிறது. இவ்வரங்கேற்றம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளை யாசிக்கிறேன்.

"உயிர்கள் சார்ந்ததன் வண்ணம் அமையும்" என ஆன்மிக வாதிகளும், உளவியலாளர்களும் குறிப்பிடுவர். அவ் வகையில் இயல், இசை, நாடகம் முதலான அனைத்துக் கலைகளும் நிரம்பியது எமது இணுவில் பதியாகும். அதே போலத் திருத்தலங்கள் எமது கிராமத்தையும் மக்களையும் நல்வழிப்படுத்துவதாகவும், நற்பண்பு உள்ளவர்களாகவும் வழிகாட்டி நிற்கின்றன என்பதில் நாம் பெருமை அடைகின்றோம். மேலும் மற்றவர்களை உபசரிப்பதிலும் வழிகாட்டுவதிலும் யாருக்கும் இணையில்லாதவர்கள் இணுவில் நன்மக்கள் என நாம் பெருமையடையலாம்.

கட்டளைகள், உத்தரவுகள், அச்சுறுத்தல்கள் முதலானவை மூலம் அன்பையோ, உற்றாண்மையையோ, மாற்றத்தையோ காண முடியாது. தாய், தந்தை, ஆசிரியர், நலன்விரும்பிகள், அயலாரின் முன்மாதிரியான வாழ்க்கையே ஒருவரைச் சிறந்த வழியில் வாழ வைப்பதாக அமையும். அவ் வகையில் செல்வன். சரவணபவன் பிரணவன் அவர்களின் இசையுடன் தொடர்பான ஈடுபாடும், இம்மிருதங்க அரங்கேற்றமும் இவ்வம்சத்தை எமக்குக் காட்டி நிற்கின்றன. அவரின் இவ் இசைக்கலை மேலும் வளர்ச்சியடையச் சிவகாமி அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்

உண்மையுள்ள

கா.வைத்தீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை வித்தகன் பிரணவன்

இந்த நாட்டின் தண்ணுமைப் பாரம்பரியத்தில் தனக்கென உரிய தனிச்சிறப்புகளைக் கொண்ட நல்லாசானாக விளங்கும் கலாபூஷணம் திரு.க.ப.சின்னராசா அவர்களிடம் மிருதங்க கலையினை வரன்முறையாகப் பயின்று அரங்கேற்றம் செய்யும் கலாவித்தகர் சரவணபவன் பிரணவன் அவர்களின் இசையாற்றலும் கருவியாற்றலும் மேலும் வளர்ந்து சிறப்பெய்த எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

பிரணவன் கலையாற்றலுடன் மட்டும் நின்று கொள்ளாது தனது கல்வியிலும் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி தனது பட்டப் படிப்பினைப் பூர்த்தி செய்து இன்று உலக வங்கியின் நிதியுதவியில் எமது வடமாகாண பாதிக்கப்பட்ட மக்களிற்கென திட்டமிடப்பட்ட வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் திட்டப் பொறியியலாளராக பணிபுரிவதையிட்டு நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

இவர் மேலும் கல்வியிலும் கலையிலும் சிறந்த ஒரு சிறந்த மனிதராக விளங்க வாழ்த்துகிறேன்.

Eng.(Mrs.).Amarakoon,
Team Leader, Technical Audit,
Resource Development Consultant

# கலைப்பணி தொடர வாழ்த்துக்கள்

தமிழர் தம் இசைப் பாரம்பரியத்தில் முகிழ்ந்தெடுத்த தோற்கருவிகளுள் மிருதங்கம் தனித்துவமானதும், தண்ணென்ற ஒலி எழுப்பும் சால்புடையதும் ஆகும். இவ்வாறு சிறப்புப் பெற்ற மிருதங்கக் கலையைச் சிறப்புடன் கற்று வடஇலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தில் முதன்மைச் சித்தியெய்திய கலாவித்தகர் சரவணபவன் பிரணவன் அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

மிருதங்கக் கலையை இந்நாட்டில் வரன்முறையாகக் கற்பித்துவரும் நல்லாசிரியர்களுள் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்கள் தனித்துவமானவர். அறிமுறை நிலையிலும், ஆற்றுகை நிலையிலும் அவரது ஆற்றல்கள் சிறப்பாக வெளிப்பட்டு நிற்கின்றன. அவரிடம் மிருதங்கக் கலையைப் பயின்று, அரங்கேற்றம் செய்யும் கலாவித்தகர் சரவணபவன் பிரணவன் பாராட்டுக்குரியவர். இவருடைய கலைப் பணி தொடரவும் மேன்மேலும் பல சிறப்புக்களைப் பெற்று கலையிலும் கல்வியிலும் சிறந்து விளங்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி. (எந்திரி) எஸ்.எஸ்.சிவகுமார்
முன்னாள் திட்டப்பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவையூர் சரவணபவன் அம்பிகை தம்பதியினரின்தவப்புதல்வன்
# கலாவித்தகர் பிரணவன் அவர்களின்
# மிருதங்க இசை அரங்கேற்றத்தின்போது
# பெரியப்பா குடும்பத்தினரின் வாழ்த்துச்செய்தி

இறையருட் பொலிவினால் கல்வியும் கலைகளும் மலிந்த எம் இணுவில் திருவூரில் சக்தியின் பேரருளால் வாழும் நாமனைவரும் பெரும் பேறு பெற்றவர்கள். கல்வி கலைகளுக்கான முற்தொடர்பும் இறையருள் நாட்டமும் பிரணவனைப் பெற்றோர் நற்கல்வியை நாட வைத்தனர். இக்கால இளம் பருவத்தில் நந்தியெம்பெருமானின் தண்ணுமை இசை ஈர்த்ததால் பிரணவன் இவ்விசைப் பயிற்சியை நாடினார். இணுவில் இளந்தொண்டர் சபையின் மிருதங்க இசை மேதை கலாபூஷணம் க.ப. சின்னராசா குருவாக அமைந்தார். மிருதங்க இசைப் பயிற்சி நிறைவடையும் காலமதில் பிரணவன் பொறியியல் மாணவராகிப் பட்டமும் பெற்றுப் பதவியும் பெற்றபோதும் கலைப்பசி தீராது வட இலங்கைச் சங்கீத சபையின் பல படிகளையும் தாண்டி 2012இல் உயர் மட்ட மிருதங்க இசையில் பட்டமும் பெற்றார்.

நெஞ்சில் பதிந்திருந்த மிருதங்க இசையை நாடறியக் கலையால் பயணம் செய்ய இறையருள் உதவியது. அன்னையின் அகமகிழ்வுடன் அக்காமாரின் தூண்டுதலும் பயிற்சிக்குருவின் விசேட ஒத்துழைப்பும் அன்னை சிவகாமி அம்பாளின் பேரருளும் கைகூட்ட இன்றைய (27.04.2013) சுப தினத்தில் முன் கொடுத்து வைத்த மிருதங்க இசை அரங்கேற்றம் சிறக்கிறது.

கலைப்பயிற்சி தந்த குருவின் நல்லாசியும் திறமை சேர் இணை இசையாளர்களின் பூரண ஒத்துழைப்பும், உற்றார், உறவினர், நல்லோர், பெரியோர், நண்பர்கள், கல்வியாளர்கள், கலைஞர்கள் அனைவரதும் செம்மனம் பூரித்து ஆசி கூறி வாழ்த்துரைக்க இன்றைய சுபதினம் பொன்னாளாக அமைகிறது. இதனைக் காண எமது ஆனந்தக் கண்ணீர் மல்கிறது.

இணுவில் மண்ணின் பெருமைக்குரிய பாரம்பரியக் கலையைப் போற்றிப் பணியும் இளம் வித்தகரான பிரணவனின் மிருதங்கக் கலைச்சேவை மேலும் வளர்ந்து நாட்டின் பெருமையை மேம்படுத்த எமதன்னை இணுவைச் சிவகாமி அம்பாளின் பேரருளை வேண்டிப் பணிந்து எமது குடும்பத்தினரனைவரினதும் உளமார்ந்த வாழ்த்தைக் கூறி அன்னையைப் பிரார்த்திக்கிறோம்.

கல்வி, கலை வளர்க்கும் பணியில் வாழ்க வளமுடன்

நன்றி.

கலாபூஷணம்,
மு.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கனவது நினைவாகிறது...

முன்னை செய்தவினை உன்னை சகோதரனாய் யாம் பெற்றோம்!
அன்னை சிவகாமி முன்றலில் அரங்கேறும் கலைஞன் நீ!
கலைமகள் விரல்களில் குடி கொண்டாள்!
அவனி எங்கும் உன்புகழ் பரவட்டும்!
கல்வியில் கலைகளில் கரை கண்டவன் நீ!
மண்ணில் நீ கொட்டும் விரல் நாதம்
விண்ணில் இருக்கும் நம் தந்தையை எட்டட்டும் – களி கொள்ளட்டும்!
பெற்ற பயனை உன் தாய் அடைந்தாள்! பெருமை கொண்டாள்!
உன் அரங்கேற்றம் காணும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை – எனினும்
என் கனவது நினைவாகிறது.
உன் எட்டாப் பயணத்தில் என்றும் நான் இருப்பேன் உன்னருகில்
வாழ்க என்றும் வளமுடன்...
ஏற்றம் பெருக கல்வியிலும் கலைகளிலும்! உயர்க உழைப்பில்!
உயர்க உழைப்பில்!....!
காலம் உன் கைகளில் காட்டு உன் திறமையை....

நன்றி

அக்கா அபிராமி, ராஜ்மோகன், ஆரபி (லண்டன்)

# அரங்கேற்றம் காண்கிறான் தம்பி

இறை அருளாலும் குரு அருளாலும் அரங்கேற்றம் காணும் எம் தம்பி கலாவித்தகர் சரவணபவன் பிரணவனை வாழ்த்துவதில் நாம் மிகவும் மகிழ்வடைகின்றோம்.

மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தில் தனது மேற்படிப்பினை தொடர்ந்த போதிலும் தனது சிறு வயதிலிருந்து ஆர்வத்துடன் பயின்ற மிருதங்கக் கலையினை இடை நிறுத்தாது ஆசிரியர் தரத்தில் கலாவித்தகர் என்ற பட்டத்தைப் பெற்றதையிட்டு இந்த அவையினருடன் நாமும் பெருமையடைகின்றோம். இக்கலையினை மிருதங்க பேராசான் சங்கீத ரத்தினம் க.ப.சின்னராசா அவர்களிடம் பயின்றதையிட்டு நாம் மிகவும் பெருமை அடைவதுடன் அவருக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அரங்கேறும் நம் கலைஞன் எதிர்காலத்தில் பெரியவர்களை மதித்து கலைஞர்களை வாழ்த்தி அறிந்தவற்றை அறிந்தவர்களிடம் அறிந்து பூரண கலைஞனாக புவியில் சிறக்க சிவகாமி அம்பாளை வேண்டி வாழ்த்தி வணங்கி விடை பெறுகின்றோம்.

நன்றி,

ஆனந்தன், சிவகாமி, அபிசா, அஸ்வின்
அக்கா குடும்பம் (பிரான்ஸ்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையொளி பரப்பி வாழ்க!

ஈழமணி நாட்டின் யாழ்ப்பாணத்தில் பாரம்பரியம் நிறைந்த ஊராம் இணுவில். இங்கு சைவமும், தமிழும இரு கண்ணெனத் திகழும் வயல் சூழ்ந்த கிராமம், கலைகள் வளர்க்கும் ஈழத்தின் தஞ்சையாம் இணுவில். இக்கிராமத்தில் தமிழ்ப் பாரம்பரியக் குடும்பத்தில் அவதரித்தவர் திரு.சரவணபவன் பிரணவன். இவர் சிறந்த பண்பாளன், சமூக சேவையாளன். இவர் எமது சனசமூக நிலையத்தில் அங்கத்தவராக இணைந்து சமூக சேவைகளிலும் ஈடுபாடு காட்டுகின்றார். இவர் ஒரு பட்டதாரியாக திகழ்ந்தாலும், திட்டமிடல் பொறியியலாளராக "வடக்கின் துரித மீட்சித்திட்டம்" அமைப்பில் கடமையாற்றினாலும், கலை மீது கொண்ட ஈடுபாட்டினாலும் மிருதங்க கலையைப் பயின்று இன்று அரங்கேற்றம் காண்கிறார். இவரால் இனிமேல் இணுவில் கிராமம் பெருமையடையப் போகின்றது.

இவர் பல்கலைகளும் பெற்று சீரும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

இணுவில் சிவகாம சுந்தரி சனசமூக நிலையத்தினர்.

| உருப்படி | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|
| 1. வர்ணம் | பகுதாரி | ஆதி | தவமைந்தன் |
| 2. வாதாபி | ஹம்சத்வனி | ஆதி | முத்துஸ்வாமி தீட்சிதர் |
| 3. பஜரே | பீம்பிளாஸ் | ஆதி | வாசுதேவச்சார்யார் |
| 4. அனுபம | அடானா | கண்டசாபு | தியாகராஜா |
| 5. உன்னை அல்லால் | கல்யாணி | ஆதி | பாபநாசம் சிவன் |
| 6. சரசசாமதான | காபிநாராயணி | ஆதி | தியாகராஜா |
| 7. இராகம்தானம்பல்லவி | கீரவாணி | கண்டதிரிபுடை | க.ப.சின்னராசா |
| 8. வேலனே | பெஹாக் | மிஸ்ரசாபு | நீலா ராமமூர்த்தி |
| 9. இணுவை | காபி | ஆதி | க.ப.சின்னராசா |
| 10.சுட்டும்விழி | இராகமாலிகை | ஆதி(திஸ்ரநடை) | பாரதியார் |
| 11. தில்லானா | மதுவந்தி | ஆதி | தவமைந்தன் |
| 12.திருப்புகழ் | ஹம்சானந்தி | சந்ததாளம் | அருணகிரிநாதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கில் அணிசெய் கலைஞர்கள்



**பாட்டு :-** **தவமைந்தன் தவநாதன் றொபேட்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

ஈழத்தமிழரின் செவ்வியல், நாட்டார் கலைகள் அனைத்திலும் ஆழக்கால் பதித்திருக்கும் ஆற்றுகையாளரான இவர் இசையமைப்பாளராக, பாடகராக, கருவியாளராக, எழுத்தாளராக, ஆய்வாளராகத் திகழ்ந்து வருகின்ற முதுநிலை இசை விரிவுரையாளர் ஆவார்.

**வயலின் :-** **சுருதி வேந்தன் அ.ஜெயராமன்**
(நூலகர், பொதுநூலகம், யாழ்ப்பாணம்)



கலைக்குடும்பத்தில் தோன்றிய இவர் ஈழத்தின் ஒலிப்பதிவுத் துறையில் நீண்ட கால அனுபவ முதிர்ச்சி கொண்டவராகவும் இசை, நடன, மிருதங்க அரங்கேற்றங்களுக்குரிய சிறந்த பக்க வாத்தியக் கலைஞராகவும் தனியான வயலின் இசையரங்குக் கலைஞராகவும் திகழ்ந்து வருகின்றார்.

**மிருதங்கம் :-** **கலாவித்தகர் சரவணபவன் பிரணவன்**
(திட்டப் பொறியியலாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம்)



**கடம் :-** **கலாவித்தகர் நாகரட்ணம் மாதவன்**
(இசை ஆசிரியர், மாதகல்)

கலாவித்தகர், நுண்கலைமாணி, முதுகலைமாணி, ஆய்வியல் நிறைஞர் பட்டங்களை மிருதங்கத் துறையில் பெற்றிருக்கும் இவர் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். எண்ணற்ற ஆற்றுகைகளிலும் அரங்கேற்றங்களிலும் மிருதங்கம், கடம் போன்ற கருவிகளை நுட்பமாகக் கையாண்டு வரும் இவர் வளர்ந்து வரும் இளங்கலைஞர்களுள் அர்ப்பணிப்பு மிகுந்த கலைஞர் ஆவார்.

**கஞ்சிரா :-** **கலாவித்தகர் விமலசிங்கம் ராகவன்**
(ஆசிரியர், மன்னார் இலகடிப்பிட்டி றோ.க.த.க.பா)



கலாவித்தகர், நுண்கலைமாணி போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கும் இவர் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். மிருதங்கம், கடம், கஞ்சிரா போன்ற கருவிகளைத் திறமையுடன் இசைக்க வல்ல இவர் மன்னார் இலகடிப்பிட்டி றோ.க.த.க பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.



**முகர்சிங் :-** **கலாவித்தகர் சிங்கராசா செந்தூரன்**
(ஆசிரியர், புனித பரியோவான் கல்லூரி)

யாழ்.புனித பரியோவான் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வரும் இவர் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். கலாவித்தகர், நுண்கலைமாணி போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கும் இவர் மிருதங்கம், முகர்சிங் போன்ற கருவிகளை இசைக்கும் திறன் கொண்டவராகவும் ஓவியம், நாடகம், வில்லிசை போன்ற துறைகளிலும் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்குகின்றார்.

**தம்புரா :-** **இசைமணி க.ரஜீவன்**
(இசை ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)



நுண்கலைமாணிப் பட்டம் பெற்றிருக்கும் கந்தசாமி ரஜீவன் அவர்கள் யாழ் மத்திய கல்லூரியில் இசை ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். அர்ப்பணிப்புடன் மாணவர்களை இசையாளர்களாக உருவாக்கி வருகின்ற இவர் கடந்த பல ஆண்டுகளாக இசைக் கலையில் ஈடுபட்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறப்புக்கும் நன்றிக்கும் உரியவர்கள்...

சீர் மேவும் இணுவையம்பதியில் எம்மைத் தோற்றுவித்து கல்வி, கலைகள் யாவற்றையும் நன்குணர்வித்த எங்கள் குலதெய்வங்களைப் போற்றிப் பணிவுடன் பாடசாலைக் கல்வியுடன் கலைபயிலவென நாடியபோது அன்புடன் அரவணைத்து அரிய கலையாம் மிருதங்க இசையை வரன்முறைப்படி ஓதி உணர வைத்து உயர்வடையச் செய்து இன்றைய அரங்கேற்றத்தையும் நிறைவு செய்த மிருதங்க மேதை கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

"அருள்ஞானதீபம்" என்னும் சிறப்பான மலர் வெளியிடுவதற்கான ஆசிகள், வாழ்த்துக்கள், கட்டுரைகள், ஆலோசனைகள் தந்துதவிய பெரியார்கள், கல்விமான்கள், கலைஞர்கள், பொறியியல்துறை மேலதிகாரிகள், நண்பர்கள் அனைவரும் இவ்வரிய மலரின் சிறப்புக்கு உரியவர்கள்; நன்றிக்கும் உரியவர்களே!

இணுவை மண்ணில் இணையற்ற மிருதங்க இசை அரங்கேற்றத்தை இனிதே அமைய வைத்த யாழ் பல்கலைக்கழக சங்கீத விரிவுரையாளர் தவமைந்தன் றொபேட் அவர்களுக்கும் இணைக் கலைஞர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

இந்நிகழ்விற்காக மண்டபத்தை வழங்கிய சிவகாமி அம்பாள் திருமண மண்டப நிர்வாக உறுப்பினர்கள், ஒலி ஒளி அமைப்பாளர்கள் மற்றும் குறுகிய காலத்தில் இவ்வரிய மலரை சிறப்பாக மலரச் செய்ய உதவிய இவ்வூர் சுடர்நிலவு கிறபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

மற்றும் இன்றைய விழாவைச் சிறப்பித்து ஒத்துழைத்த அனைத்து நண்பர்கள், உறவினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

வணக்கம்

நன்றியுடன்...
குடும்பத்தினர்

Sudarnilavu. 0776687443

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org